

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவாரூர் கே.கே.நகர் பிடாரிஅம்மன் கோயில் தோட்டத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பாக துணை அமைப்பாளர் என்.தினேஷ்குமார் ஏற்பாட்டில் தோட்டம் அமைக்கப்பட்டது. மாவடக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஒன்றிய கழக செயலாளர் புலிவலம் ஏ.தேவா, சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட தலைவர் ஆர்.காசிராஜன், மாவட்ட அமைப்பாளர் மீனாட்சி சூரிய பிரகாஷ் ஜீ.வரதராஜன், தாய்வீடு. செந்தில் மற்றும் பலர் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட தும்மிச்சம்பட்டி பகுதியில் வாக்காளர்களுக்கு முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்து பேசினார் .

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்,

# மயிலாடி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

கன்னியாகுமரி, ஜூலை 13-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், மயிலாடி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 10.07.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் மயிலாடி பேரூர் கழக அலுவலகம் அருகில் வைத்து மயிலாடி பேரூர் கழக செயலாளர் எ.சுதாகர் தலைமையில், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் எம்.மதியழகன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் அ.வேதமணி, மாவட்டப் பிரதிநிதி த.மதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி A.கவிதன், பேரூர் கழக நிர்வாகிகள் பழனி, ராமசந்திரன், கிருஷ்ணன், கோபால், முத்துகிருஷ்ணன் உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 1 கல் சிற்ப தொழிலுக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்ற மயிலாடி பகுதியில் சுமார் 5000 பேர் சிற்பத் தொழில் செய்து வருகின்றனர். இத்தொழிலுக்கு தேவையான கற்கள் தற்போது வெளி மாவட்டங்களில் இருந்து பெறப்படுவதால், அதிக செலவினை தவிர்க்கும் வகையில் அதை கன்னியாகுமரி மாவட்டத்திலேயே கிடைக்க பெறுவதற்கு தேவையான முயற்சி மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மலைகளில் இருந்த வனவிலங்குகள் அடிக்கடி ஊருக்குள் புகுவதால் பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடன் இருந்து வருகின்றனர். எனவே வனவிலங்குகள் ஊருக்குள் வருவதை தடுக்கும் வகையில் மாவட்ட வன அலுவலகம் சார்பில் தடுப்பு வேலி அமைத்திட வேண்டி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்: 3 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் பேரூர் தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தீர்மானம்: 4 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.



இராமேஸ்வரம் நகர், இராமேஸ்வரம் நகரில் பொந்தம்புளி அருகில் சுதந்திர போராட்ட மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் 269–வது பிறந்தநாள் விழா மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சாமுத்துராமலிங்கம் வழிகாட்டுதலின்படி, இராமேஸ்வரம் நகர் தி.மு.க. சார்பில் நகர் கழக செயலாளர் கே.இ. நாசர்கான் தலைமையில் மாவீரர் அழகு முத்துக்கோன் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், மயிலாடி பேரூர் தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பேரூர் கழக செயலாளர் எ.சுதாகர் தலைமையில், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் என்.தில்லைசெல்வம், அ.வேதமணி, த.மதன், A.கவிதன், பழனி, ராமசந்திரன், கிருஷ்ணன், கோபால், முத்துகிருஷ்ணன் உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடி களத்தில் நின்று உயிர்நீத்த மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, மாவட்டப் பிரதிநிதி ராமலிங்கம், வார்டு செயலாளர் மாரிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வாக்காளர்களுக்கு நன்றி!

## முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

ஒட்டன்சத்திரம், ஜூலை 13-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட நல்லாகவுண்டன் நகர், தும்மிச்சம்பட்டி, தும்மிச்சம்பட்டி புதூர், சத்யாநகர், திருவள்ளுவர் சாலை உள்ளிட்ட பகுதிகளில், தொகுதியில் தொடர்ந்து 7வது முறையாக வாக்களித்து வெற்றி பெறச்செய்த வாக்காளர்களுக்கு நன்றிதெரிவித்து பேசினார்,

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. இந்நிகழ்வில் நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கண்ணன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், இளைஞர்அணி, மாணவர்அணி, தகவல் தொழில்நுட்ப அணிநிர்வாகிகள்உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### காதல் வலையில் சிக்கிய 15 வயது சிறுமி - ரூ.15 லட்சம் நகை, பணம் மோசடி!

# தலைமறைவான த.வெ.க. பிரமுகர் மீது ‘போக்சோ’ வழக்குப் பதிவு!

## “சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது” என பொதுமக்கள் குற்றச்சாட்டு!

திருவள்ளூர், ஜூலை 13 -

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு அருகே 15 வயது சிறுமியை காதலிப்பதாகக் கூறி நம்பிக்கை ஏற்படுத்தி, அவரது வீட்டிலிருந்த ரூ.15 லட்சம் மதிப்பிலான நகை மற்றும் பணத்தை பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கில், தவெகவைச் சேர்ந்த பிரமுகர் ஜெய் கிருஷ்ணா (25) மீது போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ள நிலையில், தலைமறைவாக உள்ள அவரை கைது செய்ய தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

போலீசார் பதிவு செய்த வழக்கின் விவரங்களின்படி, பள்ளிப்பட்டு அருகே பேட்டை கண்டிகை ஊராட்சிக்குட்பட்ட ராமாநாயுடு கண்டிகை கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியின் மகன் ஜெய் கிருஷ்ணா, அதே கிராமத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமியிடம் காதலித்து திருமணம் செய்து கொள்வதாகக் கூறி நெருக்கம் ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வாக்குறுதியை உண்மையென நம்பிய சிறுமி, பெற்றோருக்கு தெரியாமல் வீட்டிலிருந்த சுமார் 8 சவரன் தங்க நகைகள் மற்றும் பணம் உள்ளிட்ட ரூ.15 லட்சம் மதிப்பிலான சொத்துகளை எடுத்துச் சென்று அவரிடம் ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது.

சில நாட்களுக்குப் பிறகு வீட்டில் நகைகள் மற்றும் பணம் காணாமல் போனதை கவனித்த பெற்றோர், சிறுமியிடம் விசாரித்தபோது நடந்த விவரங்களை தெரிவித்துள்ளார். இதையடுத்து, காதல் பெயரில் சிறுமியை ஏமாற்றி நகை மற்றும் பணத்தை மோசடி செய்ததாகக் கூறி திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

புகாரைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட போலீசார், சிறுமி என்பதாலும், வழக்கின் தன்மையையும் கருத்தில் கொண்டு த.வெ.க. நிர்வாகி ஜெய் கிருஷ்ணா மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். வழக்குப்பதிவுக்குப் பிறகு அவர் தலைமறைவாகியுள்ளதாகக் கூறப்படும் நிலையில், அவரைக் கைது செய்ய தனிப்படைகள் அமைத்து தேடுதல் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுமிகளுக்கு எதிராக காதல் பெயரில் நடைபெறும் ஏமாற்றுச் சம்பவங்கள் குறித்து பெற்றோர்களிடையே அச்சம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. சமூக வலைத்தளங்கள் மற்றும் செல்போன் மூலம் சிறார்களை குறிவைத்து நடைபெறும் குற்றங்களைத் தடுக்க விழிப்புணர்வும், கண்காணிப்பும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

“பெண்களின் பாதுகாப்பே தங்களின் முதன்மை என்று ஆளுங்கட்சி தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால், இந்த வழக்கில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த பிரமுகர் எனக் கூறப்படும் ஒருவர் மீது போக்சோ வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் விரைவாகவும் வெளிப்படையாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய சம்பவங்கள் பொதுமக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும். எனவே அரசு இந்த வழக்கில் உண்மைகளை வெளிக்கொண்டு வந்து, குற்றம் நிரூபிக்கப்பட்டால் சட்டத்தின் முழு கடுமையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்”என்றும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

### மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம்

# காமராஜ்புரம் கழக முன்னோடி கே.குமார் திருவுருவப் படத்திறப்பு!

## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 13 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 16வது வட்டம், காமராஜ்புரம் பகுதியில் கழக மூத்த முன்னோடி (நினைவில் வாழும்) கே.குமார் அவர்களின் திருவுருவப்பட திறப்பு நிகழ்ச்சிகள் கழகத்தினர் திரளாக கலந்து கொண்டார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் காமராஜபுரம் பகுதியில் வசிக்கும் திருகே குமார் வயது 53 அவர்கள் கடந்த 16 நாட்களுக்கு முன் இயற்கை எய்தினார். இவருக்கு குணா, புஷ்பராஜ் என்கிற இரண்டு மகன்கள் உள்ளனர். இவர்கள் இருவரும் இளைஞர் அணியில் உறுப்பினராக உள்ளனர். இயக்கத்தின் முன்னோடியான இவரது படத்திறப்பு நிகழ்ச்சி 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு குமார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி.சிவபிரகாஷ், காமராஜ்புரம் ஜி.நாகலிங்கம், வட்ட இளஞ்சரணி துணை அமைப்பாளர் விக்னேஷ், எம்.கிருபாகரன், அர்ஜுனன் உள்ளிட்ட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி, 16வது வட்டம், காமராஜ்புரம் இளைஞர் அணியைச் சார்ந்த குணா, புஷ்பராஜ் ஆகியோரின் தந்தையார், கழகத்தின் மூத்த முன்னோடி குமார் அவர்களின் 16 ஆம் நாள் நினைவு நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் மலர்த்தூவி அஞ்சலி செலுத்தினார். வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி.சிவப்பிரகாஷ், காமராஜ்புரம் ஜி.நாகலிங்கம், வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விக்னேஷ், எம்.கிருபாகரன், அர்ஜுனன் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.